# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590

**ஆணை நாள்: 09.11.2020**

முன்னிலை

**திரு ச. த. தமிழ்குமார், பி.ஏ., பி.எல்.,**

**மாநில தகவல் ஆணையர்**

…………

**வழக்கு எண். NC2312/F/2019 (SA261/F/2019)**

திரு.க.மதியழகன் … மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/ செயற்பொறியாளர்,
இயக்குதலும் & பராமரித்தலும்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
பூக்கொல்லை ரோடு,
மன்னார்குடி,
திருவாரூர் மாவட்டம். … பொது அதிகார அமைப்பு

•••••••••••••

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 06.10.2018 |
| முதல் மேல்முறையீட்டு நாள் - பிரிவு 19(1) | 07.11.2018 |
| மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு - பிரிவு 19(3) | 08.01.2019 |
| ஆணையத்தின் ஆணை நாள் | **29.08.2019** |
| ஆணையத்திற்கு மனு நாள் | **05.10.2019** |

******

**ஆணை**

இவ்வழக்கு ஏற்கனவே 29.08.2019 நாளிட்ட ஆணை வாயிலாக பொதுத் தகவல் அலுவலரை தகவல் வழங்க உத்தரவிடப்பட்டிருந்தது. இவ்வழக்கு தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாத காரணத்தால் இன்று (09.11.2020) தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மேல்முறையீட்டாளர் திரு க. மதியழகன் மற்றும் பொதுத் தகவல் அலுவலர்/ உதவி

செயற்பொறியாளர், இயக்குதல் மற்றும் பராமரித்தல், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், மன்னார்குடி, திருவாரூர் மாவட்டம் ஆகியோர் பங்கேற்றனர்.

2. மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 06.10.2018 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில், 590 009 579 மின் இணைப்பு எண்ணின் விண்ணப்பதாரர் பெயர், கணவர் பெயர், மின் இணைப்பு கோரி விண்ணப்பித்த நாள், மின்இணைப்பு எண் மற்றும் வழங்கப்பட்ட நாள், சாட்சி கையொப்பமிட்டவர்கள் பெயர் மற்றும் முழு முகவரி, அரசு ஊழியர் மனைவிக்கு தாட்கோ உதவியுடன் மின்இணைப்பு பெற முடியுமா என்ற விபரம், 590 009 579 மின்இணைப்பு எண்ணிற்கு விண்ணப்பத்தினை ஆய்வு செய்த அலுவலர் பெயர் மற்றும் பதவி, 2010 - 2011 ஆம் ஆண்டு மின் இணைப்பு கோரி விண்ணப்பித்தவர்கள் எத்தனை நபர்கள் என்ற விபரம், 2013 ஆம் ஆண்டு எத்தனை நபர்களுக்கு மின்இணைப்பு வழங்கப்பட்டது என்ற விபரம், போலி பெயரில், மோசடியாக பெறப்பட்ட மின் இணைப்பை ரத்து செய்திட, யாரிடம் முறையீடு செய்ய வேண்டும் என்ற விபரம் மற்றும் முகவரி தெரிவிக்கவும், ஒப்புகை சீட்டு பெயர் பெற்றுக்கொண்டவர் பெயர் மற்றும் முகவரி, அரசுக்கு இழப்பு ஏற்படுத்துதல், உண்மையை மறைத்தல், மோசடியில் ஈடுபடுதல் குறித்து நீதி மன்றத்தில் வழக்கு ஏன் நாங்கள் தொடுக்க கூடாது என்பதற்கு விளக்கம், போன்ற விபரங்களையும் அவை சம்மந்தப்பட்ட தகவல்களையும் 12 இனங்களில் வழங்கக் கோரியுள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் 08.11.2018 ஆகிய தேதியிட்டு தகவல் வழங்கியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர் சரியான தகவல் வழங்கவில்லை என தெரிவித்து, 07.11.2018 தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவை பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீட்டு அலுவலருக்கு தாக்கல் செய்துள்ளார். முதல் மேல்முறையீட்டு அலுவலர் சரியான தகவல் வழங்கவில்லை என தெரிவித்து, மேல்முறையீட்டாளர் 08.01.2019 தேதியிட்டு பிரிவு 19(3)ன் கீழ் இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை இவ்வாணையத்தில் தாக்கல் செய்து, தான் கோரிய இனங்களுக்கான சரியான தகவல்களை பெற்றுத்தருமாறு ஆணையத்தை கேட்டுள்ளார். அம்மனு மீது 29.08.2019 அன்று விசாரணை மேற்கொண்டு **SA261/F/2019** ஆணை வாயிலாக பொதுத் தகவல் அலுவலரை 7 தினங்களுக்குள் தகவல் வழங்க உத்தரவிடப்பட்டிருந்தது. பொது அதிகார அமைப்பினரால் தனக்கு உரிய தகவல் வழங்கப்படாததால் மேல்முறையீட்டாளர் 05.10.2019 நாளிட்ட மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அம்மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (09.11.2020) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் தொலைபேசி வாயிலாக ஆஜராகி, பொதுத் தகவல் அலுவலர் தகவல் ஏதும் வழங்காததால் தான் கோரிய தகவல்களை பெற்று வழங்குமாறு ஆணையத்தைக் கேட்டுக்கொண்டார்.

5. இன்றைய விசாரணையில் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மேல்முறையீட்டாளர் 6(1) மனுவில் கோரிய தகவல்களை முழுவதுமாக வழங்குவதாக ஆணையத்தில் தெரிவித்தார்.

6. மேல்முறையீட்டாளரின் மனுவையும், பொதுத் தகவல் அலுவலர் அளித்த தகவல்களையும் ஆணையம் பரிசீலனை செய்து கீழ்கண்ட உத்தரவு பிறப்பிக்கிறது:-

- மேல்முறையீட்டாளருக்கு ஏறத்தாழ 2 வருட காலத்திற்கு மேலாக பதில் அளிக்காத அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு தகவல் பெறும் உரிமைச் சட்ட பிரிவு 20(1)ன் கீழ் நாள் ஒன்றுக்கு ரூ.250/- வீதம் ரூ25,000/- தண்டம் ஏன் விதிக்கக்கூடாது என்பதற்கான அவரது எழுத்துமூல விளக்கத்தினை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 1 வார காலத்திற்குள் நேரிடையாக ஆணையத்திற்கு சமர்ப்பிக்கவேண்டும் என்றும் இப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகிறது.

- மேல்முறையீட்டாளர் 06.10.2018 தேதியிட்டு கோரிய தகவல்களை முழுவதுமாக இவ்வாணை கிடைக்கப்பெற்ற 7 தினங்களுக்குள் மேல்முறையீட்டாளர் கோரும் ஆவண நகல்களை சான்றிட்டு தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 7(6)-ன்படி இலவசமாக வழங்குமாறும் பொதுத் தகவல் அலுவலருக்கு இதன்மூலம் ஆணையம் உத்தரவிடுகின்றது.

- மேல்முறையீட்டாளர் 06.10.2018 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள தகவலை வழங்கத் தவறும்பட்சத்தில் பொதுத் தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20 (1) -ன்கீழ் நடவடிக்கை எடுக்கப்படுமென்று ஆணையம் எச்சரிக்கின்றது.

ஒம்/- (ச.த. தமிழ்குமார்)
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

<u>வழக்கு எண். NC2312/F/2019 (SA261/F/2019)</u>

<u>பொது அதிகார அமைப்பு</u>
பொதுத் தகவல் அலுவலர்/ செயற்பொறியாளர்,
இயக்குதலும் & பராமரித்தலும்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
பூக்கொல்லை ரோடு,
மன்னார்குடி,
திருவாரூர் மாவட்டம்.

<u>மேல்முறையீட்டாளர்</u>
திரு.க.மதியழகன்,
இராயபுரம் பாலம், தெற்குத்தெரு,
இராஜப்பையன்சாவடி - அஞ்சல்,
நீடாமங்கலம் வட்டம்,
திருவாரூர் மாவட்டம்.

Copy to: Judgement File/ Spare
JE/PA -16.11.2020